




பத்திரிகையாளனாக தன் வாழ்வைத் துவங்கிய ஞாநி, சென்னை கிருத்துவக் கல்லூரி மாணவர். புகழ்பெற்ற 'பரிக்ஷா' நவீன நாடகக்குழுவின் இயக்குனர். 'தினமணி 'ஜூனியர் விகடன்' பத்திரிகைகளில் வெளிவந்த இவரின் கட்டுரைகள் தனிச் சிறப்பு பெற்றவை. 'மனிதன் பதில்கள்' தனி முத்திரை பதித்தது. 'தீம்தரிகிட' என்ற பத்திரிகையை பத்தாண்டு இடைவெளிகளுக்குப் பிறகு மீண்டும் நடத்துகிறார். அரசியல் நிகழ்வுகள், மாற்றங்கள் நிகழும் போதெல்லாம் இவரின் கருத்துகளுக்கு மீடியாவில் தனி முக்கியத்துவம் உண்டு. தொலைகாட்சியில் “வேர்கள்” தொடர் முக்கியமானது. பத்திரிகையாளனாக வாழ்வதில் சந்தோஷம் கொள்பவர்.

ஞாநி : பேச்சு

எல்லோருக்கும் வணக்கம்.

இன்று காலை நிகழ்ச்சியிலே பேசறவங்களுக்கெல்லாம் ஒரு தலைப்பு கொடுக்கப்பட்டிருந்தது. அவங்களோட பள்ளிக்கூட அனுபவங்களை நெனச்சி சிறகடிச்சி அவங்களைப் பறக்கச் சொல்லி.... மதிய நிகழ்ச்சியிலே பேசறவங்களுக்கெல்லாம் வேறொரு தலைப்பு கொடுக்கப்பட்டிருந்தது. ஆனால், காலை நிகழ்ச்சியே முடியாததனாலே தொடர்ந்து பள்ளிக்கூட அனுபவங்களையே பேசிக்கிட்டிருந்தாங்க. மதிய நிகழ்ச்சியிலே பேச வேண்டிய ஆட்கள் எத்தனை பேர் இருக்கோம்னு பார்த்தேன். ரெண்டு பேர் இருக்கோம். இந்த மதிய நிகழ்ச்சியிலே பேச இருக்கிற எங்க ரெண்டு பேரோட தலைப்பு என்னன்னு கேட்டீங்கன்னா, உண்மையிலேயே அது எங்களுக்கான தலைப்பே கிடையாது. அடுத்த நூற்றாண்டில் கல்வி, அதுதான் எங்களுக்கான தலைப்பு.

அடுத்த நூற்றாண்டில் கல்வி பற்றி நாங்க எப்படி பேசறது? நீங்கதான் பேசணும். காரணம் என்ன? அடுத்த நூற்றாண்டில் கல்வியைப் பத்தி நான் கொஞ்சம் உங்களோடு பேசப்போறேன். ஆனா, அதை நீங்கதான் பேசணும் என்கிற விஷயத்தை மட்டும் நான் உங்ககிட்ட பேசப் போறேன். காரணம், இன்னைக்கு இந்தப் பள்ளிக்கூடத்திலே பிளஸ் டூவிலே இருக்கிறவங்க எல்லாம் ஒரு அஞ்சு வருஷம் எட்டு வருஷத்துக்குள்ளே இதே மாதிரி பிரமுகர்களாக மாறிடுவீங்க. இப்ப மேடையிலே இருக்கிற வி.ஐ.பி.ஸ் மாதிரி. ஒரு அஞ்சு வருஷத்திலேர்ந்து ஏழு வருஷம்தான். அதிக நாள் இல்லே. இந்த அஞ்சு வருஷத்திலேர்ந்து ஏழு வருஷத்துக்குள்ளே நீங்க எல்லோரும் வாலிபர்களா யுவதிகளா இளைஞர்களா வெவ்வேறு வேலைகளுக்குப் போயிடுவீங்க. முக்கியமான பொறுப்புகளிலெல்லாம் இருப்பீங்க. இப்ப, ஆறாம் கிளாஸ் எட்டாம் கிளாஸ் படிக்கிறவங்க கூட பார்த்தீங்கன்னா ஒரு பத்து வருஷந்தான். ஆக அடுத்த அஞ்சு வருஷத்திலேர்ந்து பத்து வருஷத்திலே நாங்களெல்லாம் இன்னும் வழுக்கை விழுந்து நரைச்சு காணாம போயிடுவோம். ஆனா, அடுத்த அஞ்சு வருஷத்திலேர்ந்து பத்து வருஷத்துலே நீங்கதான் இருக்கப்போறீங்க. நீங்கதான் அடுத்த நூற்றாண்டின் கல்வி எப்படி இருக்கணும்னு தீர்மானிக்கப் போறவங்க, இங்கே உட்கார்ந்துகிட்டிருக்கீங்க.

இந்த நூற்றாண்டிலே கல்வியைத் தீர்மானிச்சவங்க எல்லாம் போய்ச் சேர்ந்துட்டாங்க. இப்ப இருக்கிறவங்க எல்லாம் இந்த நூற்றாண்டிலே கல்வியை நடத்திக்கிட்டிருக்கோம். ஒரு நூறு வருஷத்துக்கு முன்னே கல்வி எப்படி இருந்துச்சின்னு நீங்க யோசிச்சுப் பார்க்கணும். இந்தப் பள்ளிக்கூடத்தைப் பத்தி நெனைக்கும் போதெல்லாம் மனசுக்குள்ளே நம்மை அறியாமலே ஒரு நெகிழ்ச்சி ஏற்படுது. சென்னையிலேர்ந்து வரும்போது மனசுக்குள்ளே யோசிக்கும்போது - நூறு வருஷம் நடந்துக்கிட்டிருக்கிற பள்ளிக்கூடத்தோட விழாவுக்குப் போறோம்னு நெனைக்கும்போது மனசுக்குள்ளே நெகிழ்ச்சி ஏற்பட்டுது. லெனின் சொன்ன மாதிரி, நம்ம சொந்த அப்பா அம்மாவே நூறாவது வயசு கொண்டாடி நாம் பார்க்க முடியலே. நெறைய பேரு நூறு வயசு இருக்கிறதில்லே. அப்படி அவங்க இருந்தாங்கன்னா, நாம இருக்கிறதில்லை. பார்க்கவே முடியாம போயிடுது. ஆனா, ஒரு பள்ளிக்கூடம் நூறு வருஷம் இருக்கிறதைப் பார்க்க முடிகிறதுன்னு சொன்னாரு, நூறு வருஷத்துக்கு முன்னே இங்கே நிலைமை என்னவா இருந்ததுன்னு நீங்க யோசிச்சுப் பார்க்கணும்.

நூறு வருஷம் முன்னே இந்தப் பள்ளிக்கூடம் உருவான நேரத்திலே நம்ம சமூகத்தில் ஜனங்க எப்படி இருந்தாங்கன்னு யோசிச்சுப் பார்க்கணும். இன்னைக்கு நாலாயிரம் பிள்ளைகள் இங்கே படிக்கிறீங்க இல்லையா. ஐயா, இந்தப் பள்ளிக்கூடம் தொடங்கின போது எத்தனை பேர் படிச்சாங்க தெரியுமா? இந்தப் பள்ளிக்கூடம் நூறு வருஷத்துக்கு முன்னே தொடங்கின போது இருநூறு பேர்தான் படிச்சாங்க. நீங்க நாலாயிரம் பேர் நூறு வருஷத்துக்கு முன்னே இருந்திருந்தீங்கன்னா, உங்களிலே மூவாயிரத்து எண்ணூறு பேருக்குப் படிக்கிற வாய்ப்பே கிடையாது. நீங்க பள்ளிக்கூடத்துக்கே வர முடியாது. உங்களுக்குப் பள்ளிக்கூடம் கிடையாது. உங்க ஜாதி அடிப்படையிலே பள்ளிக்கூடம் கிடையாது. உங்களோட பொருளாதார அடிப்படையிலே - ஏழ்மை அடிப்படையிலே பள்ளிக்கூடம் கிடையாது. இப்படி, பல காரணங்களாலே உங்களுக்குப் பள்ளிக்கூடம் கிடையாது. அதைவிட இன்னும் கொடுமையான தொரு சமூகமாக இருந்தோம்.

நூறு வருஷம் முன்னே, இங்கே இருந்த பையனுங்க பொண்ணுங்க அத்தனை பேருக்கும் கல்யாணம் முடிஞ்சு போயிருக்கும். இதை இப்ப நீங்க கற்பனை பண்ணிப் பார்க்க முடியுமா? நம்ம ஊரிலே தமிழ்நாட்டிலே ஒரு வயசுக் குழந்தைக்குக் கல்யாணம் பண்ணி வச்சாங்க. அந்தக் குழந்தைக்கு ரெண்டு வயசு ஆகிற போது, அதன் புருஷன் செத்துப் போயிட்டான். புருஷனுக்கு நாலு வயசு. அவன் செத்துப் போயிட்டான். அந்தக் குழந்தை ரெண்டு வயசிலேயே விதவையாயிடுச்சு. விதவைன்னு எழுத்துக்கூட்டி எழுதத் தெரியாது அந்தக் குழந்தைக்கு விதவைன்னா என்ன பண்ணுவாங்க தெரியுமா? அவங்க ஆயுசு பூராவும் திரும்ப கல்யாணம் பண்ணிக்காம, வீட்டுக்குள்ளேயே ஒரு மூலையிலே ஒடுங்கிக்கிடந்து அப்படியே சாகணும். இது மாதிரி தமிழ்நாட்டில் மட்டும் நூறு வருஷம் முன்னே பார்த்தீங்கன்னா, கிட்டத்தட்ட பாதி பேர் புருஷனை இழந்த விதவையாக இருந்தாங்க. இந்த வயசுல இருந்த பெண்களுக்கெல்லாம் கல்யாணம் ஆயிடுச்சு. இருந்த பையன்களுக்கெல்லாம் கல்யாணம் ஆயிடுச்சு. கல்யாணம் ஆகி பதினைஞ்சு வயசுல செத்துப் போனாங்க. இருபது வயசுல செத்துப் போனாங்க. நாற்பது வயசுல செத்துப் போனாங்க. இப்படி இருந்த சமூகத்தை மாத்தி, நாம எல்லோரும் படிக்கணும்னு மாத்தினாங்க பாருங்க. அப்படி இந்தச் சமூகத்தை மாத்தறதுக்கு இந்தியா பூரா பல இடங்களில் வேலை செஞ்சாங்க.

ஒரு டேனிஷ் மிஷனரி வேலை செஞ்சதினாலே திருவண்ணாமலையிலே நூறு வருஷமா கல்வி இருக்கு, திருவண்ணாமலையில் நூறு வருஷமா இளம் விதவைகள் இல்லை. குழந்தைக் கல்யாணம் இல்லை. எல்லாரும் படிக்கப் போறாங்கன்னா, இதைத் தொடங்கி வைத்து ஒரு புரட்சி செய்த பெருமை, திருவண்ணாமலையைப் பொருத்தமட்டில் கண்டிப்பாக டேனிஷ் மிஷன் பள்ளிக்கு இருக்கு. அவங்க எல்லாரையும் நீங்கள் எல்லாம் உங்களுடைய ஆயுள் காலம் முழுவதும் நெனச்சு நன்றி சொல்ல வேண்டும். சரி, நன்றி சொல்லியாச்சு. அவங்களெல்லாம் போயிட்டாங்க. ஒரு நிமிஷம் நாம் அவங்களுக்காக எழுந்து நின்று அஞ்சலி செலுத்தலாம். ஆனா, நீங்க என்ன செய்யப் போறீங்க? அடுத்த நூறு வருஷத்திலே பின்னால் வரப்போறவங்களுக்கு நீங்க என்ன செய்யப் போறீங்க?

இந்தப் பள்ளி நூறு வருஷமா நடந்துகிட்டிருக்கு, இதைத் தொடங்கினவங்க யாரும் இப்ப உயிரோட இல்லை. அவங்க உயிரோடு இருந்தால், இது நூறு வருஷமா தொடர்ந்து நடக்குதுன்னு தெரிஞ்சா, எவ்வளவு மகிழ்ச்சியடைவாங்கன்னு சொல்வதற்கு வார்த்தையே கிடையாது. ஏன்னா, அவங்க என்னவெல்லாம் கனவு கண்டாங்களோ, என்னவெல்லாம்

நடக்கணும்னு நெனைச்சாங்களோ, அதிலே ஒரு பகுதியாவது நடந்துக்கிட்டிருக்குது. நிறைவேறியிருக்குது. நீங்க படிச்சிக்கிட்டிருக்கீங்க. அஞ்சு வருஷம் பத்து வருஷம் கழிச்சி நீங்க எல்லாரும் முக்கியமான வேலைகளுக்குப் போகப் போறீங்க. அரசாங்க வேலைக்குப் போவீங்க. தனியார் வேலைக்குப் போவீங்க. கம்ப்யூட்டர் என்ஜினியர் ஆவீங்க, நெறைய பேர் சினிமாவுக்குப் போவீங்க, நடிப்பீங்க, ஆடுவீங்க, பாடுவீங்க, எழுதுவீங்க. எழுத்தாளராக இருப்பீங்க. எல்லாம் நீங்கதான் இருக்க போறீங்க, உங்க காலத்திலே கல்வியை நீங்க எப்படிப்பட்ட கல்வியாக்கப் போறீங்க?

முதலில் ஒரு விஷயம். இப்ப நீங்க படிக்கும்போது எதுவெல்லாம் சரியில்லைன்னு நெனைக்கிறீங்களோ, அதையெல்லாம் நாங்க மாத்துவோம்னு நீங்க ஒரு உறுதி எடுத்துக்கணும். இன்னைக்கு உங்க படிப்பிலே என்னவெல்லாம் சரியில்லைன்னு நீங்க நெனைக்கிறீங்களோ, அதையெல்லாம் ஏன் சரியில்லைன்னு நீங்க ஆராய்ச்சி பண்ணணும். ஏன் தப்பாயிருக்குன்னு யோசிக்கணும். இந்தத் தப்பை எப்படி சரி பண்றதுன்னு யோசிக்கணும். ரொம்ப சுலபமா எல்லா பள்ளிக்கூடத்தையும் மூடிட்டு, பள்ளிக்கூடமே வேணாம்னு சொல்லிடலாம். ரொம்ப சுலபமான விஷயம். ஆனா, ஒரு பள்ளிக்கூடத்தை நடத்தி அதை எப்படி சரியா நடத்தறதுன்னு செய்வது இருக்கே, அதுதான் நமக்கு இருக்கிற உண்மையான சவால். கல்வி வேணும். அது எப்படி சிறந்த கல்வியாக இருக்க முடியும், அப்படீன்னு யோசிக்கணும்.

இன்னையிலேர்ந்து நூறு வருஷம் கழிச்சி, இந்தப் பள்ளிக்கூடம்னு இல்லை, நீங்க பல பேர் போய் பணியாற்றக் கூடிய பள்ளிக்கூடம், உங்க குழந்தைகள் படிக்கக்கூடிய பள்ளிக்கூடம். அது எப்படிப்பட்ட பள்ளிக்கூடமாக இருக்கணும்னு உங்க எல்லாருக்கும் ஒரு கனவு வேணும். நீங்க அதைப் பத்தி **dream** பண்ணனும். **You must have a dream. Dream**ன்னா , நான் டாக்டராவேன், என்ஜினியராவேன், நான் கார் வாங்கப்போறேன். இது வாங்கப் போறேன்கிறது மட்டும் **dream** இல்லே. அதை விட முக்கியமான **dream,** நாளைக்கு ஜனங்க எப்படி இருப்பாங்க, இன்னைக்கு நம்ம ஊரிலே என்ன இருக்கு? ஜாதி இருக்கா? இல்லையா? ஜாதி இருக்கு இன்னும் ஜாதி இருக்கு. ஜாதியை ஒழிக்கணும்னு முயற்சி பண்ணிக்கிட்டிருக்கோம். ஆனா, நூறு வருஷம் ஆகியும் ஜாதி ஒழியலே. ஜாதி இருந்துக்கிட்டிருக்கு இன்னையிலேர்ந்து நூறு வருஷம் கழிச்சி நீங்க உருவாக்கக்கூடிய சமுதாயத்திலே ஜாதி இருக்காதுன்னு நீங்க தீர்மானிக்கணும். அந்தக் கனவு உங்களுக்கு வேணும்.

நீங்க வளரக் கூடிய சமுதாயத்திலே ஆண்கள் இருப்பாங்க. பெண்கள் இருப்பாங்க, மனுஷங்க இருப்பாங்க, எல்லோரும் சமமான மனுஷங்களாக இருப்போம், அப்படீங்கற ஒரு கனவு நமக்கு வேணும். இதை யார் சொல்லிக் கொடுப்பாங்க? எங்கே சொல்லிக் கொடுப்பாங்க? பள்ளிக்கூடத்திலே சொல்லிக் கொடுக்கிறதிலே எழுத்தறிவு கிடைக்குது. எழுத்தறிவு கூடவே ஒழுக்கமும் கிடைக்குது. இந்த ரெண்டு விஷயம் கிடைக்குது. இந்த ரெண்டு விஷயமும் இல்லேன்னு வச்சிக்கோங்க, இன்னைக்கு லெனின் சொன்ன மாதிரி, பள்ளிக்கூடத்திலே நாம் கத்துக்கிட்டதை விட வெளியிலே நெறைய கத்துக்கலாம். ஆனா, அதைப் புரிஞ்சிக்கறதுக்கு முதலிலே படிச்ச படிப்பு அவசியமா இருக்கும். பள்ளிக்கூடத்திலே என்னவெல்லாம் படிச்சோமோ, அந்த அடிப்படை - இந்த பேஸ்மெண்ட் இல்லைன்னா, அதுக்கு மேலே நாம் ஒண்ணையுமே கட்டியிருக்க முடியாது.

இன்னைக்கு என்னுடைய பள்ளியைப் பத்திச் சொல்லணும். நான் இந்த மேடையிலே பெருமைப்படக்கூடிய விஷயம், இங்கே இருக்கக்கூடிய நண்பர் நடிகர் நாசரும் நானும் ஒரே பள்ளிக்கூடத்திலே படிச்சோம். நாங்க ரெண்டு பேரும் செங்கல்பட்டிலே ஒரே பள்ளிக்கூடத்து மாணவர்கள். எங்க பள்ளிக் கூடத்திலேர்ந்து ரெண்டுபேர் இன்னைக்கு இந்த மேடையிலே ஒண்ணா கலந்துக்கிறோம்னு நெனைக்கும் போது அவரும் நானும் எங்க பள்ளிக் கூடத்தைப் பத்திப் பெருமைப்படறதுக்கு விஷயம் இருக்கு. அப்படி இந்தப் பெருமை நாளைக்கு நீங்க போற இடங்களிலே, ஒரே மேடையிலே பத்து பேர் பிரமுகர்களா வந்திருக்காங்க. பத்துப் பேரும் திருவண்ணாமலை டேனிஷ் மிஷன் ஸ்கூல் மாணவர்கள். அவங்க பத்துப் பேரும் மேடையிலே இருக்காங்கன்னு சொல்லும் போது அந்தப் பெருமை உங்களுக்கு இருக்கணும். இந்தக் கனவை வளர்த்துக்கிட்டுப் போறதுதான் உங்க வேலை.

இந்தக் கனவை வளர்க்கணும்னா, நீங்க ரெண்டு காரியங்களைச் செய்யணும். ஒண்ணு, என்ன சந்தேகம், என்ன பிரச்சனை, என்ன சிக்கல், என்ன இருந்தாலும் கேள்வி கேளுங்க. எதைப் பற்றி வேணுமானாலும் கேள்வி கேளுங்க, கேள்வி கேட்கக் கேட்கத்தான் பதில் கிடைக்கும். இந்த பதில் யார்கிட்டேர்ந்து கிடைக்கும்? உங்க ஆசிரியர்கிட்டேர்ந்து கிடைக்கலாம். உங்க பெற்றோர்கிட்டேர்ந்து கிடைக்கலாம். எங்கிருந்து வேணுமானாலும் கிடைக்கலாம். ஆனா, பதில் கிடைக்கிற வரைக்கும் கேள்வியை நீங்க விட முடியாது. ஒரு இடத்திலே பதில் கிடைக்காட்டி, அடுத்த இடத்திலே அதே கேள்வியை நீங்க கேட்கணும். திரும்ப அந்தக் கேள்விக்கான பதிலை நீங்க தேடணும். இப்படி தேடத்தேடத்தான் நீங்க அடுத்த நூற்றாண்டுக்கான கல்வியை உருவாக்க முடியும். அப்படி உருவாகிற கல்விதான் நம்ம சமூகத்திலே இருக்கிற கோளாறுகளையெல்லாம் நீக்க முடியும்.

லெனின் உங்களுக்குப் பாடிக் காண்பிச்சார். 'சரிகமபதநி'யில் உள்ள 'சவை மேல் ஸ்தாயியிலும் அடுத்து அதையே கீழ் ஸ்தாயியிலும் உங்களைப் பாடச் சொன்னார். உங்க எல்லோராலேயும் பாட முடிஞ்சுது. அப்ப, உங்க எல்லோராலேயும் பாட முடியும். உங்க எல்லோராலேயும் ஆட முடியும். உங்க எல்லோராலேயும் நடிக்க முடியும். உங்க எல்லோராலேயும் விளையாட முடியும். உங்க எல்லோராலேயும் படிக்க முடியும்னா, நீங்க எல்லாரும் சேர்ந்து இந்த உலகத்தை மாத்த முடியும். 'நீங்க மாத்துவீங்க' என்கிற அந்தக் கனவைத்தான் - என் தலைமுறை எனக்கு முன்தலைமுறை இப்படி நாங்களெல்லாம் சுமந்து வந்திருக்கிற அந்தக் கனவை - அடுத்து உங்ககிட்டே கொடுத்துவிட்டுப் போகிற விழாவாகத்தான் இந்த விழாவை நான் பார்க்கிறேன்.

இந்தப் பள்ளிக்கூடம் நூறு வருஷ காலம் நடந்திருக்குது. நடத்தினாங்க. நூறு பேர் இருந்திருப்பாங்க. அவங்க போயிடுவாங்க. அடுத்து நடத்துறதுக்கு நூறு பேர் வருவாங்க, தொடர்ந்து இது மாதிரி போய்க்கிட்டேயிருக்கும். ஆனா அந்த நூறு பேர் எங்கேயிருந்து வரணும்னா, உங்ககிட்டேர்ந்து வரணும். நீங்க வந்து உங்க பள்ளியை நடத்தறதுதான் பெரிய வேலை. அது உங்க கையிலே இருக்கு. அதை நீங்க செய்யணும்.

அடுத்த நூற்றாண்டோட கல்வி எப்படிப்பட்டதா இருக்கணும்னா, உங்களுக்கு ஒரே ஒரு செய்தி சொல்லிக் காட்டிட்டு முடிக்கணும்னு நெனைக்கிறேன். சென்னையிலே **Childrens Garden School**-னு ஒரு பள்ளி இருக்கு. நான் பெரிதும் மதிக்கக்கூடிய பள்ளிகளிலே அது ஒரு பள்ளி. அந்தப் பள்ளியினுடைய தலைவியா சகுந்தலா சர்மான்னு ஒருத்தங்க

இருக்காங்க. அவங்ககிட்டே ஒரு பள்ளிக்கூடம் எப்படி இருக்கணும்னு கேட்டேன். அதுக்கு அவங்க ஒரே ஒரு வாக்கியம்தான் பதிலாகச் சொன்னாங்க. அந்த பதில்தான் ஒவ்வொரு பள்ளிக்கூடமும் வைத்துக் கொள்ள வேண்டிய கனவு. அடுத்த நூற்றாண்டுக் கல்வி என்னவாக இருந்தாலும் அதுக்கும் இதுதான் கனவுன்னு நான் சொல்ல விரும்புகிறேன். குழந்தைங்க காலையிலே ஸ்கூலுக்கு வந்தாங்கன்னா, சாயந்திரம் வீட்டுக்குப் போகிறபோது, ஐயோ, வீட்டுக்குத் திரும்பப் போக வேண்டியிருக்கேன்னு வருத்தப்படணும். அப்படி வருத்தப் பட்டாங்கன்னா, அந்தப் பள்ளிக்கூடம்தான் சிறந்த பள்ளிக்கூடம்னு சகுந்தலா சர்மா சொன்னாங்க. அப்படிப்பட்ட பள்ளிக்கூடத்தை உருவாக்குகிற பணி டேனிஷ் மிஷினரிக்கு மட்டுமல்ல, நாளைக்கு உங்க ஒவ்வொருத்தருக்கும் இருக்கு. பெற்றோரா நம்ம கடமை இருக்கு. ஆசிரியரா நம்ம கடமை இருக்கு. குடிமக்களா நம்ம கடமை இருக்கு. நாம் அத்தனை பேரும் சிறந்த மனிதர்களாவதற்கு, எங்களுடைய இந்தச் சுமையை நீங்க ஏத்துக்கிட்டு தொடர்ந்து நடைபோடணும்னு கேட்டுக்கிறேன்.

பள்ளிக்கூடத்திலே என்ன பிரச்சனை இருந்தாலும் பள்ளிக்கூடத்துக்குள்ளே இருந்துதான் தீர்க்க முடியும். பள்ளிக்கூடத்தை விட்டுட்டுப் போய் தீர்க்க முடியாது. எனவே தொடர்ந்து படிங்க. நெறைய பேரைப் படிக்கறதுக்கு ஊக்குவிக்கணும். படிப்பு என்பதுதான் உங்க பரம்பரைச் சொத்தாகும். எத்தனை தலைமுறை இருந்தாலும் நீடித்து வரக்கூடிய ஒரே சொத்து. நீங்க சம்பாதிக்கக் கூடிய அத்தனை சொத்தும் அழிஞ்சி போகலாம். படிப்பை மட்டும்தான் உங்களாலேயும் அழிக்க முடியாது. நீங்க படித்த படிப்பை உங்களாலேயே அழிக்க முடியாது. உங்க எல்லோருக்கும் என்னுடைய வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொண்டு விடைபெறுகிறேன்.

**- சிறகிசைத்த காலம்**
நவம்பர் **2007**